ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீகமலவல்லி நாயகி ஸமேத ஸ்ரீஅழகியமணவாள பரப்ரஹ்மணே நம:




(உறையூர் "நம்நாச்சியார்" கமலவல்லி)

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# ஸ்ரீலக்ஷ்மீ தந்த்ரம்

(ஐந்தாவது அத்யாயம் – நான்காம் பகுதி)
இதற்கான ச்லோகம் மற்றும் பொருள் – தமிழில்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீஅஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்
Email: sridharan_book@yahoo.com

5-51 கர்ம இந்த்ரியம் ச வாகாதி தைஜஸாத் ஸம்ப்ரவர்த்ததே
உபயஸ்மாத் ததச்சாஸீத் புத்தி கர்ம இந்த்ரியம் மந:

பொருள் – வாக்கு முதலான கர்ம இந்த்ரியங்கள் அனைத்தும் தைஜஸ அஹங்காரத்திலிருந்து தோன்றுகின்றன. கர்ம இந்த்ரியம், ஞான இந்த்ரியம் ஆகிய இரண்டின் கலவையாக உள்ள புத்தி என்பது வைகாரிகம் மற்றும் தைஜஸம் ஆகிய இரண்டிலிருந்தும் தோன்றுகிறது.

5-52 ச்ரோத்ரம் த்வக் ச ஏவ ச க்ஷச்ச ஜிஹ்வா த்ராணாம் ச பஞ்சமம்
புத்தி இந்த்ரியாணி பஞ்சாஹு: சக்திரேணா மதாத்மிகா

பொருள் - கேட்கும் உறுப்பு, தொடு உணர்தல் அறியும் உறுப்பு, காணும் உறுப்பு, சுவைக்கும் உறுப்பு மற்றும் மணம் அறியும் உறுப்பு ஆகிய ஐந்தும் கர்ம இந்த்ரியங்கள் ஆகும். அவற்றின் சக்தியாக நானே உள்ளேன்.

5-53 வாக் ச ஹஸ்தெள ச பாதெள ச ததோபஸ்தம் ச பாயு ச
கர்ம இந்த்ரியாணி பஞ்சாஹு: சக்திரேண மதாத்மிகா

பொருள் - வாக்கு, கைகள், கால்கள், மர்மக்குறிகள் மற்றும் ஆசனவாய் ஆகிய ஐந்தும் கர்ம இந்த்ரியங்கள் ஆகும். இவற்றின் சக்தியாகவும் நானே உள்ளேன்.

5-54 யா ஸா விஜ்ஞானசக்திர்மே பாரம்பர்ய க்ரமாகதா
புத்தி இந்த்ரியாணி அதிஷ்டாய விஷயேஷு ப்ரவர்த்ததே

பொருள் - அனைத்தையும் அறிந்து கொள்ளவல்ல எனது சக்தியானது, படிப்படியாக இந்த உற்பத்திகளில் இறங்குகிறது. இதன் காரணமாகவே இந்த ஞான இந்த்ரியங்கள் தங்களுக்கான பொருள்களை உணர இயல்கிறது (அல்லது எனது சக்தியே இந்த்ரியங்களை அவற்றின் விஷயங்களின் திருப்புகிறது).

5-55 க்ரியா சக்திச்ச யா ஸா மே பாரம்பர்ய க்ரமாகதா
கர்ம இந்த்ரியாணி அதிஷ்டாய கர்த்தவ்யேஷு ப்ரவர்த்ததே

பொருள் - எனது க்ரியா சக்தி (செயலாற்றும் திறன்) என்பது படிப்படியாக உற்பத்தியில் இறங்குகிறது. இந்தச் சக்தியானது கர்ம இந்த்ரியங்களை அவற்றின் செயல்களில் ஈடுபடுத்துகிறது.

5-56 ச்ரோத்ரஸ்ய விஷய: சப்த: ச்ரவணம் ச க்ரியா மதா
த்வசச்ச விஷய: ஸ்பர்ச: ஸபர்சநம் ச கிரியா மதா

பொருள் – கேட்கும் உறுப்பின் விஷயமாக ஒலி உள்ளது. இந்த உறுப்பின் பணி என்பது கேட்பதாகும். உணர்ந்து கொள்ளும் உறுப்பின் விஷயமாகத் தொடுதல் உள்ளது. இந்த உறுப்பின் பணி என்பது தொடுதலை உணர்தல் ஆகும்.

5-57 சக்ஷுஷோ விஷயோ ரூபம் தர்சனம் ச க்ரியா மதா
ஜுஹ்வாயா விஷயோ ரஸ்யோ ரசனம் ச க்ரியா மதா

பொருள் - பார்க்கும் உறுப்பின் விஷயமாகக் காட்சிகள் உள்ளன. இதன் பணியானது காண்பது ஆகும். சுவைக்கும் உறுப்பின் விஷயமாகச் சுவை உள்ளது. இதன் பணி என்பது சுவை அறிதல் ஆகும்.

5-58 க்ராணஸ்ய விஷயோ கந்த ஆக்ராணம் ச க்ரியா மதா
வ்ருத்தயோ விஷயேஷ்வஸ்ய ச்ரோத்ராதே: ச்ரவணாதய:

பொருள் - நுகரும் உறுப்பின் விஷயமாக மணம் உள்ளது. இதன் பணியானது மணம் அறிதல் ஆகும். இவ்விதமாகக் கேட்கும் உறுப்பு கேட்டபடி இருத்தல் முதலான செயல்பாடுகள் .....(அடுத்த ச்லோகத்தில் தொடரும்).

5-59 ஆலோசநாநி கத்யந்தே தர்மிமாத்ர க்ரஹச்ச ஸ:
திக் ச வித்யுத்ததா ஸூர்ய: ஸோமோ வஸுமதீததா

பொருள் - ..... (கடந்த ச்லோகம் தொடர்கிறது) என்பது ஆலோசநா எனப்படுகிறது. இதன் மூலம் ஒன்றாக உள்ள பொருள்கள் தனித்தனியே பிரித்து அறியப்படுகின்றன (விளக்கம் காண்க). திசைகள், மின்னல், சூரியன், சந்திரன், பூமி ஆகியவை .....(அடுத்த ச்லோகத்தில் தொடரும்).

விளக்கம் - பொதுவாக இந்த உலகில் அனைத்துப் பொருள்களும் ஒன்றாகவே கலந்து கிடக்கின்றன. உதாரணமாக ஓர் அறையை எடுத்துக் கொண்டால் அங்கு பொருள்கள் உள்ளன, ஓசை உள்ளது, மணம் உள்ளது, சுவை அளிக்கும் உணவு உள்ளது. நமது அந்தந்த புலன்கள், இவ்விதமாகக் கலந்து கிடக்கும் பொருள்களைச் சரியாகப் பிரித்து எடுத்துக் கொள்கின்றன. கண் பார்க்கிறது, மூக்கு மணம் வீசும் பொருள்களை அறிகிறது – போன்றவை. இதுவே இங்கு உணர்த்தப்பட்டது.

5-60 அதி தைவம் இதி ப்ரோக்தம் க்ரமாச்ச்ரோத்ராதி பஞ்சகே
அதி பூதாம் இதி ப்ரோக்த: சப்தாத்யோ விஷய: க்ரமாத்

பொருள் - ... (கடந்த ச்லோகம் தொடர்கிறது) கேட்கும் உறுப்பு முதலான ஐந்து இந்த்ரியங்களின் அபிமான தேவதைகளாக உள்ளன. இவற்றின் விஷயமாக உள்ள ஒலி போன்றவை, பூதங்கள் என்று கூறப்படுகின்றன.